தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

—

புதன் கிழமை, 1979 மார்ச், 7.

—

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9-00 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. முனு ஆதி அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

1. வினாக்கள்—விடைகள்.

உடுக்குறியிட்ட வினாக்கள்.

கொடைக்கானல் வட்டத்தில், வாழையில் முடிகொத்து நோய்.

குறுகிய கால வினா எண் 7.—திரு. என். பழனிவேல்: மிகுபாஷபா வேளாண்மை பாசனத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா.—

(அ) கொடைக்கானல் வட்டத்தில் முடிக்கொத்து நோய் தாக்கியதால் அப்பகுதி வாழை முழுவதும் அழிந்து வருவதை இந்த அரசு அறியுமா?

(ஆ) இதனால் பாதிக்கப்பட்ட விவசாயிகள் அரசிடம் ஏதேனும் கோரிக்கை கொடுத்துள்ளார்களா?

(இ) அதன் மீது அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு:

(அ) கொடைக்கானல் பகுதியில் வாழையில் முடிக்கொத்து நோய் தாக்கப்பட்டுள்ளதை அரசு அறியும்.

(ஆ) சமீபத்தில் கொடுக்கவில்லை.

(இ) கேள்வி எழவில்லை.

திரு. என். பழனிவேல்: பேரவைத் தலைவரவர்களே, கொடைக் கானல் வட்டத்திலுள்ள செம்புரான்குளம், தாண்டிக் குடி, பெரும்பள்ளம் பேன்ற இடங்களில் பழனியிலிருந்து கொடைக் கானல் செல்லும் வழியெல்லாம் இருக்கக்கூடிய விவசாயி களுடைய வாழைத் தோட்டங்கள் சமீப காலத்தில் முடிக் கொத்து நோயால் பெரிதும் பாதிக்கப்பட்டு குஷ்டரோகியைப் போல் அந்த இலைகள் சுருங்கி மகசூல் முழுவதும் இப்பொழுது அழிந்து கொண்டிருக்கின்றன. குறிப்பாக, சிறு மலை வாழைப்

[1979 மார்ச் 7

பழம் தமிழகத்திலே புகழ் பெற்றது, வருமானம் தருவது. அந்தப் பழத்தினுடைய வருமானம் குறைவதால், அந்தத் தொழில் அழிவதால், தமிழகத்திற்குப் பெரும் நஷ்டம் ஏற்பட்டுள்ளது. அதனால் விவசாயிகள் செய்யும் தொழில் அழியக் கூடிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளதால் அதைப் பாதுகாக்க அரசு புதிய வழிமுறை ஏதேனும் செய்யவுள்ளதா என அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : பேரவைத் தலைவரவர்களே, சிறுமலை வாழைப்பழம் மிக ருசியான பழம் என்று அரசுக்குத் தெரியும். அது மட்டுமல்லாமல், சிறுமலை வாழைப் பழங்கள் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது. ஒரு வருஷத்திற்கு ரூ. 6 கோடி அளவிற்கு சிறுமலை வாழைப்பழங்கள் ஏற்றுமதி செய்யப்படுகின்றன. இந்த முடிக்கொத்து நோய் நச்சுரி என்ற ‘வைரஸ்’ நோய். இந்நோயை எப்படியாவது கட்டுப்படுத்த வேண்மென்ற காரணத்திற்காகத்தான் கடந்த 1976 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 1-ம் நாளிலேயிருந்து ‘முடிக் கொத்து நோய் ஒழிப்பு’ திட்டமாக கீழ் பழனி மலை பகுதியிலே இருக்கக்கூடிய 36,000 ஏக்கர் நிலங்களில் இந்நோய் கட்டுப்படுத்தப்படக் கூடிய நிலையிலே திட்டங்கள் தீட்டப்பட்டு செயல்பட்டு வருகிறது. அங்கே இருக்கக் கூடிய விவசாயிகளுக்கு நோய் தாக்கி அதனால் அகற்றப்படும் ஒவ்வொருதூருக்கும் 50 பைசா வீதம் ஏக்கருக்கு அதிகபட்சம் ரூ. 25 மானியமாக எல்லா விவசாயிகளுக்கும் வழங்கப்படுகிறது. பூச்சி மருந்துகள் பாதி விலையில் ஏக்கர் 1-க்கு அதிக பட்சம் ரூ. 90 வரை சிறு விவசாயிகளுக்கு வழங்கப்படுகிறது. பெரிய விவசாயிகளுக்கு இவை 25 சதவீதம் மானிய விலையில் வழங்கப்படுகிறது. நோய் தாக்கிய பகுதியிலிருந்து வாழைக் கன்றுகள், நோயில்லாத ஆரோக்கிய பகுதிக்குக் கொண்டு போகா வண்ணம் 3 இடங்களில் தடுப்பு நிலையங்கள் அமைக்கப்பட்டு கண்காணிக்கப்பட்டு வருகின்றன.

பழனி மற்றும் சிறு மலைப் பகுதிகளில் கடந்த மூன்று ஆண்டுகளாக 11 கிராமங்களில் 100 விவசாயப் பெருமக்களின் மலை வாழைத் தோட்டங்களைத் தேர்ந்தெடுத்து ஒரு ஏக்கர் பரப்பளவில் ஒவ்வொரு ஆண்டும் 100 செயல் விளக்கப் பாத்திகள் வீதம் அமைக்கப்பட்டு விவசாயிகளுக்கு நோய் தடுப்பு முறைகள், சிறந்த சாகுபடி முறைகள் நேரிடையாக விளக்கப்படுகின்றன. மேலும் மதுரை மாவட்டம் பூச்சி சட்டத்தின் கீழ் (பெஸ்ட்ஸ் அண்டு டிஸீஸஸ் ஆக்ட்) முடிக்கொத்து நோய் கண்ட மாவட்டமாக அறிவிக்கப்பட்டு அச்சட்டம் அமலுக்குக் கொண்டு வரப் பட்டுள்ளது. இதுபோன்ற நடவடிக்கைகள் எடுத்து, இந் நோயைத் தடுத்துக் கொண்டிருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.